


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## டிசம்பர் - 2019

We Are Here..!! To Guide You..!!



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## டிசம்பர் - 03.12.2019

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- பாதுகாப்பு செய்திகள
- முக்கிய தினங்கள்










# தமிழக நிகழ்வுகள்

- கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு டிசம்பர் 27, 30-ல் இரண்டு கட்டமாக தேர்தல் அறிவித்தது தமிழ்நாடு தேர்தல் ஆணையம்.
  - 388 ஊராட்சி ஒன்றியங்களுக்கு 6,471 ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களும், 12524 கிராம ஊராட்சி தலைவர்களும் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர்.
  - கிராம ஊராட்சி தலைவர், கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்கள் கட்சி அடிப்படையில் இல்லாமல் நடைபெறும்.
  - மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் தேர்தல் கட்சி அடிப்படையில் நடைபெறும்.
  - **செய்தி துளிகள்:**
    - உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலை மாநில தேர்தல் ஆணையம் நடத்துகிறது.
    - தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் ஆர்.பழனிசாமி ஆவர்.
    - உள்ளாட்சி அமைப்புகளின் பணிகள் மற்றும் அதிகாரம் இந்திய அரசியலமைப்பு அட்டவணை 9-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.
    - அரசியலமைப்பு **ஷரத்து 243 K உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் முறை** பற்றி **விவரிக்கிறது.**

# தேசிய நிகழ்வுகள்

- **இந்தியாவின் முதல் திருநங்கை அரசு செவிலியராக அன்பு ரூபி** பணியமர்த்தப்பட்டுள்ளார்.
    - மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் வாயிலாக பல்வேறு பொறுப்புகளுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணையை தமிழக முதல்வர் பழனிச்சாமி வழங்கினார்.
    - **செய்தி துளிகள்:**
        - ஜோயிட்டா முண்டால் - இந்தியாவின் முதல் திருநங்கை நீதிபதி
        - K. பிரித்திகா யாசினி - இந்தியாவின் முதல் திருநங்கை காவல் உதவி ஆய்வாளர்
        - ஷப்நம் மௌசி - இந்தியாவின் முதல் திருநங்கை சட்டமன்ற உறுப்பினர்.

- **இந்தியா-ஸ்வீடன் இடையே 3 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியது.**
    - துருவப்பகுதி ஆய்வு, புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் ஆராய்ச்சி, கடல்சார் விவகாரங்கள் ஆகிய துறைகளில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.
    - இந்த ஒப்பந்தங்கள் இந்திய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந் மற்றும் ஸ்வீடன் மன்னர் கார்ல் கஸ்தா.்.ம் இடையே நடைபெற்றன.
    - **செய்தி துளிகள்:**

- ஸ்வீடன் மன்னராட்சி முறை கொண்ட நாடாகும்.
- உலகெங்கிலும் 44 நாடுகளில் மன்னராட்சி முறை பின்பற்றப்படுகிறது.
- குடியரசு தலைவர் அல்லது அதிபராட்சி கொண்ட நாடுகள் உலகெங்கிலும் 90 நாடுகள் உள்ளன.

## விளையாட்டு செய்திகள்

- தெற்காசிய **விளையாட்டு போட்டியில் ரன்களை விட்டு கொடுக்காமல் 6 விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்தார் அஞ்சலி சந்த்.**
  - இவர் நேபாள நாட்டு மகளிர் கிரிக்கெட் அணி வீராங்கனை ஆவார்.
  - இதற்கு முன் மாலத்தீவு வீராங்கனை மாஸ் எலிஸா 3 ரன்களுக்கு 6 விக்கெட்டுகளை வீழ்த்தியதை சாதனையாக இருந்தது.
  - **செய்தி துளிகள்**:
    - தெற்காசிய விளையாட்டு போட்டிகள் நேபாள தலைநகர் காத்மண்டுவில் நடைபெற்று வருகிறது.
    - 8 ஆண்டுகளுக்கு பின் தெற்காசியப் போட்டிகளில் கிரிக்கெட் விளையாட்டு சேர்க்கப்பட்டுள்ளது.

## பாதுகாப்பு செய்திகள்

We Shine Academy TM

- முப்படை தளபதிக்கான பொறுப்புகள் குறித்த அறிக்கையை அரசிடம் சமர்பித்தது உயர்நிலை குழு.
    - **தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் தலைமையில் உயர்நிலை குழு** அமைக்கப்பட்டது.
    - முப்படைகளுக்கும் இடையே இணைப்பு பாலமாகச் செயல்படுவது, அந்தந்தப் படைகளுக்கான தேவைகளை ஒதுக்கீடு செய்வது போன்றவை முக்கிய பணிகளாக இருக்கும்.
    - **செய்தி துளிகள்**:
        - கார்கில் மறு ஆய்வுக் குழு கடந்த 1999-ம் ஆண்டு முப்படை தளபதி பதவியை உருவாக்க பரிந்துரைத்தது.
        - கடந்த ஆகஸ்ட் 15-ம் தேதி முப்படை தளபதி பதவி உருவாக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்தது.
        - இந்திய அரசியலமைப்பு ஷரத்து 53 இந்திய குடியரசு தலைவர் முப்படைகளின் தலைவராவர் என்று தெரிவிக்கிறது.

## முக்கிய தினங்கள்

- **உலக மாற்றுத்திறனாளிகள் தினம் - டிசம்பர் 3**
    - மையக்கரு – "மாற்றுத் திறனாளிகள் மற்றும் அவர்களின் தலைமையின் பங்களிப்பை ஊக்குவித்தல்"
    - **செய்தி துளிகள்:**

- இந்தியாவில் மாற்றுத் திறனாளிகளுக்கு சம வாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு, முழுப் பங்கேற்பு ஆகியவற்றை ஊக்குவிக்க 1955-ம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் சட்டம் இயற்றப்பட்டது.
- 2011-ம் ஆண்டு கணக்கெடுப்பின் படி இந்தியாவில் 2 கோடியே 60 லட்சம் பேர் மாற்றுத் திறனாளிகளாக உள்ளனர்.
- உலக சுகாதார நிறுவன அறிக்கையின்படி 10 கோடி பேர் உலகம் முழுவதும் மாற்றுத் திறனாளிகளாக உள்ளனர்.

## திருக்குறள்

**குறள் எண்** : **36**

அதிகாரம் : அறன் வலியுறுத்தல்

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : பாயிரம்

**அன்றறிவாய் என்னாது அறஞ்செய்க மற்றது**
**பொன்றுகால் பொன்றாத் துணை**

**விளக்கம் :** இளைஞராக உள்ளவர், பிற்காலத்தில் பார்த்து கொள்ளலாம் என்று எண்ணாமல் அறம் செய்ய வேண்டும். அதுவே உடல் அழியும் காலத்தில் அழியா துணையாகும்.

We Shine Academy™